தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை – 600 006.

ந.க.எண். 004462 / ஐ / இ1 / 2019, நாள். 10.09.2019.

பொருள் : பள்ளிக்கல்வி – 2018–19ஆம் ஆண்டிற்கான கனவு ஆசிரியர் விருது – மாவட்டத்திற்கு 6 ஆசிரியர்கள் வீதம் தேர்வு செய்தல் – தொடர்பாக.

பார்வை : அரசாணை (நிலை) எண். 267, பள்ளிக் கல்வி (ஜி.இ–1)த் துறை, நாள். 26.12.2017.

-----

பார்வையில் காணும் அரசாணையில் கனவு ஆசிரியர் விருது வழங்குவதற்கான நெறிமுறைகளும், தேர்வுக்குழுவும் கீழ்க்கண்டவாறு அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

"அரசு, ஊராட்சி ஒன்றியத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறந்த முறையில் கணினியைப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் சிறந்த ஆசிரியர், கல்வி இணைச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் மற்றும் குழந்தைகள் சேர்க்கை மற்றும் பள்ளி மேலாண்மையில் சிறந்து விளங்கும் ஆசிரியர் என ஒரு மாவட்டத்திற்கு ஆறு ஆசிரியர்களைத் தேர்வு செய்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆசிரியர் பாராட்டுச் சான்றுடன் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம்) வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும்".

2018–2019ஆம் ஆண்டிற்கு கனவு ஆசிரியர் விருது திட்டத்தின் கீழ் ஊக்கத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரியர் கணினி, அலைபேசி, திரை ஒலி, ஒளி அமைப்பான், இணையதள பயன்பாட்டு பலகை உள்ளிட்ட உபகரணங்களைப் பயன்படுத்தியும், அறிவியல் தொழில் நுட்பத்தையும், மாறிவரும் கற்றல், கற்பித்தல் தொழில் நுட்பத்தையும் கையாண்டு மாணவர்களுக்கு கற்பிக்கும் திறன் படைத்தவராகவும் இருக்க வேண்டும்.

மாணவர்களின் கல்விச் செயல்பாடுகளை அறிந்து கொள்ளுதல், வினவுதல், பயன்படுத்துதல் மற்றும் புதியன படைத்தல் என்ற நிலையில் வளர்த்தெடுப்பவராகவும், பள்ளி இணைச் செயல்பாடுகளான இசை, ஓவியம், தேசிய மாணவர் படை, சாரண, சாரணியர் இயக்கம், நாட்டு நலப்பணித்திட்டம், இளஞ்சிறார் செஞ்சிலுவை, மாநில, மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ளுதல் மற்றும் பரிசுகளை வெல்லுதல், தேசிய விழாக்கள் நடத்துதல் மற்றும் மாணவர்களின் தனித்திறன்களை ஊக்குவிக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும். பள்ளியில் நூலகத்தினைத் திறம்பட செயல்படுத்தி பள்ளிப் படிப்பைக் கடந்து மாணவர்களிடையே பொதுவான வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தக் கூடியவராகவும், அவர்களின் ஒழுக்கத் திறனை மேம்படுத்துபவராகவும் இருக்க வேண்டும்.

பள்ளி மேலாண்மையில் சிறந்து விளங்கி பள்ளியின் கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கி, மரங்கள் நடப்பட்டு, பசுமைச் சூழல் நிறைந்த பள்ளி வளாகம் சுத்தமாகப் பராமரித்து, அதனால் மாணவர்களின் சேர்க்கை அதிகரித்தல், தன்னுடைய தனித்திறமையால் பள்ளியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் உதவி புரியக் கூடியவராகவும், பள்ளியில் ஆசிரியர் மற்றும் மாணவர்களிடையே சுமூகமான கற்றல், கற்பித்தல் சூழ்நிலை நிலவ ஒத்துழைப்பு அளிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

ஆசிரியர் குறைந்தது 5 ஆண்டுகள் பணி அனுபவம் உடையவராக இருக்க வேண்டும். கல்வி மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகளில் பயிலும் மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டவராகவும், மாணவர்களை உளவியல் அடிப்படையில் அணுகி வழிநடத்துபவராகவும் இருக்க வேண்டும்.

பொதுவான கலை, இலக்கிய படைப்புகள் மூலம் பங்களிப்பு செய்தவராகவும், கல்வி, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் மாணவர் உளவியல் சார்ந்து கருத்தரங்கம் மூலமாகவும் ஊடகங்கள் மூலமாகவும் குறிப்பான பங்களிப்பு செய்தவராக இருக்க வேண்டும்.

இவ்விருது வகுப்பறையில் கற்பித்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். ஆசிரியர் பணியிலும், பகுதி நிர்வாகப் பணியிலும் ஈடுபடும் ஆசிரியர் பிரிவினருக்குப் பொருந்தாது. (எ.கா. பள்ளித் துணை ஆய்வாளர், முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர், மாவட்ட வளமைய கருத்தாளர், வட்டார வளமைய ஆசிரியர் மற்றும் மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட நிர்வாகப் பணிகள்).

மத்திய அரசால் வழங்கப்படும் தேசிய நல்லாசிரியர் விருது மற்றும் தமிழக அரசால் வழங்கப்படும் டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருது பெற்ற ஆசிரியர்களைப் பரிசீலனையில் எடுத்துக் கொள்ளக்கூடாது.

## மாவட்டத் தேர்வுக்குழு

| வ.எண். | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | முதன்மைக்கல்வி அலுவலர் | தலைவர் |
| 2 | முதல்வர், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | உறுப்பினர் |
| 3 | மாவட்டக் கல்வி அலுவலர்கள் | உறுப்பினர் |
| 4 | மூத்த வட்டாரக் கல்வி அலுவலர் | உறுப்பினர் |
| 5 | தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற மூத்த தலைமையாசிரியர் | உறுப்பினர் |
| 6 | கூடுதல் மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் | உறுப்பினர் |

2018–19ஆம் ஆண்டிற்கு கனவு ஆசிரியர் விருதிற்கு சிறந்த ஆசிரியர்களைத் தேர்வு செய்ய மாவட்டத் தேர்வுக் குழுவினர் துணைக் குழுவினை அமைத்து, மாவட்ட அளவில் இனம் கண்டு, நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து, மேற்குறிப்பிட்ட வழிகாட்டி நெறிமுறைகளைக் கருத்தில் கொண்டு, ஒரு மாவட்டத்திற்கு கணினி மற்றும் அறிவியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் சிறந்த ஆசிரியர்களிலிருந்து 4 ஆசிரியர்கள் வீதம், கல்வி இணைச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களிலிருந்து 4 ஆசிரியர்கள் வீதம் மற்றும் மாணவர்கள் சேர்க்கை மற்றும் பள்ளி மேலாண்மையில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களிலிருந்து 4 ஆசிரியர்கள் வீதம் மாநிலத் தேர்வுக் குழுவிற்குப் பரிந்துரைக்கப்பட வேண்டும். மாநிலத் தேர்வுக் குழுவினர் மாவட்டத் தேர்வுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட ஆசிரியர்களைப் பரிசீலனை செய்து இறுதியாக ஒரு மாவட்டத்திற்கு 6 ஆசிரியர்கள் வீதம் கனவு ஆசிரியர் விருதிற்குத் தேர்வு செய்யப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் கனவு ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் பாராட்டுச் சான்றுடன் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம்) வீதம் ஊக்கப் பரிசுத் தொகை வழங்கப்படும்.

மாவட்ட அளவிலான தேர்வுக் குழுவானது, மேற்காணும் வழிகாட்டி நடைமுறைகளைக் கவனத்தில் கொண்டு, அதனைப் பின்பற்றி 2018–19ஆம் ஆண்டிற்கு கனவு ஆசிரியர் விருதிற்கு மாநிலத் தேர்வுக்குழுவிற்கு 15.10.2019க்குள் பரிந்துரை செய்தல் வேண்டும்.

அ) தங்கள் மாவட்டத்திலுள்ள ஆய்வு அலுவலர்கள், சமூகநல அமைப்புகள், சமூகநல ஆர்வலர்கள், கல்வியாளர்கள் மூலம் பெறப்படும் பரிந்துரைகள், பள்ளிகள் மூலம் பெறப்படும் விண்ணப்பங்களைத் தங்கள் மாவட்டத்தில் துணைக் குழுக்களை அமைத்து , அப்பள்ளிகளில் ஆய்வு மேற்கொண்டு, ஆய்வின் அடிப்படையில் மதிப்பெண்கள் அளித்து, சிறந்த கனவு ஆசிரியரைத் தேர்வு செய்து, அதன் விவர அறிக்கையைப் புகைப்பட ஆதாரங்களுடன் வருகின்ற அக்டோபர் மாதம் 15ஆம் தேதிக்குள் (15.10.2019) பரிந்துரை செய்ய வேண்டும்.

ஆ) மாவட்டத் தேர்வுக் குழுவால் 2018–19 ஆம் ஆண்டிற்கான பரிந்துரைக்கப்படும் ஆசிரியர்கள் நெறிமுறைகளில் தெரிவித்துள்ளபடி, பிற ஆசிரியர்களை விட சிறப்பான விதத்தில் இருப்பதையும், செயல்படுவதையும் உறுதி செய்ய வேண்டும்

இணைப்பு: அரசாணை (நிலை) எண். 267,
பள்ளிக் கல்வி (ஜி.இ–1)த் துறை, நாள். 26.12.2017.

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்: அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – 2017–2018–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – கனவு ஆசிரியர் விருது வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வித் (ஜிஇ.1)த் துறை**

**அரசாணை (நிலை) எண்.267** **நாள் : 26.12.2017.**

திருவள்ளுவர் ஆண்டு , 2048
ஹேவிளம்பி வருடம், மார்கழி 11,

படிக்கப்பட்டவை :-

1. பள்ளிக்கல்வித் துறைக்கான மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் 2017–2018 அறிவிப்பு எண்.8. நாள். 15.06.2017.

2. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.039585/ஐ/2017, நாள். 31.07.2017 மற்றும் 03.10.2017.

-----

**ஆணை** :–

2017–2018–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

> “அரசு, ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறந்த முறையில் கணினியை பயன்படுத்தி மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் சிறந்த ஆசிரியர், கல்வி இணைச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் ஆசிரியர் மற்றும் குழந்தைகள் சேர்க்கை மற்றும் பள்ளி மேலாண்மையில் சிறந்து விளங்கும் ஆசிரியர் என ஒரு மாவட்டத்திற்கு ஆறு ஆசிரியர்களைத் தேர்வு செய்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆசிரியர் பாராட்டுச் சான்றுடன் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம்) வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும்”

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்கள் கீழ்காணும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி “கனவு ஆசிரியர்” விருதுக்கான ஆசிரியர்களை தேர்வு செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

i. இத்திட்டத்தின் கீழ் ஊக்கத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் பெறுவதற்கு தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரியர் கணினி, அலைபேசி, திரை ஒலி, ஒளி அமைப்பான்,

இணையதள பயன்பாட்டு பலகை உள்ளிட்ட உபகரணங்களை பயன்படுத்தியும், அறிவியல் தொழில் நுட்பத்தையும், மாறிவரும் கற்றல் கற்பித்தல் தொழில் நுட்பத்தையும் கையாண்டு மாணவர்களுக்கு கற்பிக்கும் திறன் படைத்தவராகவும் இருக்க வேண்டும்.

ii. மாணவர்களின் கல்விச் செயல்பாடுகளை அறிந்து கொள்ளுதல், வினவுதல், பயன்படுத்துதல் மற்றும் புதியன படைத்தல் என்ற நிலையில் வளர்த்தெடுப்பவராகவும், பள்ளி இணை செயல்பாடுகளான இசை, ஓவியம், தேசிய மாணவர் படை, சாரண, சாரணியர் இயக்கம், நாட்டு நலப்பணித்திட்டம், இளஞ்சிறார் செஞ்சிலுவை, மாநில, மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளில் பங்கு கொள்ளுதல் மற்றும் பரிசுகளை வெல்லுதல், தேசிய விழாக்கள் நடத்துதல் மற்றும் மாணவர்களின் தனித்திறன்களை ஊக்குவிக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும். பள்ளியில் நூலகத்தினை திறம்பட செயல்படுத்தி பள்ளிப்படிப்பை கடந்து மாணவர்களிடையே பொதுவான வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தக்கூடியவராகவும், அவர்களின் ஒழுக்கத் திறனை மேம்படுத்துபவராகவும் இருக்க வேண்டும்.

iii. பள்ளி மேலாண்மையில் சிறந்து விளங்கி பள்ளியின் உள்கட்டமைப்பு வசதிகளை பெருக்கி, மரங்கள் நடப்பட்டு பசுமைச் சூழல் நிறைந்த பள்ளி வளாகம் சுத்தமாக பராமரித்து, அதனால் மாணவர்களின் சேர்க்கை அதிகரித்தல், தன்னுடைய தனித்திறமையால் பள்ளியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் உதவிபுரியக் கூடியவராகவும் பள்ளியில் ஆசிரியர் மற்றும் மாணவர்களிடையே சுமூகமான கற்றல் கற்பித்தல் சூழ்நிலை நிலவ ஒத்துழைப்பு அளிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

iv. குறைந்தது 5 ஆண்டுகள் பணி அனுபவம் உடையவராக இருக்க வேண்டும்.

v. கல்வி மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகளில் பயிலும் மாணவர்களின் நலனில் சிறப்பு கவனம் செலுத்துபவராகவும் மாணவர்களை உளவியல் அடிப்படையில் அணுகி வழிநடத்துபவராகவும் இருக்க வேண்டும்.

vi. கல்வி, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் மாணவர் உளவியல் சார்ந்து கருத்தரங்கம் மூலமாகவும் ஊடகங்கள் மூலமாகவும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு சிந்தனை திறனை தூண்டுபவராகவும் குறிப்பான பங்களிப்பு செய்தவராக இருக்க வேண்டும்.

vii. இவ்விருது வகுப்பறையில் கற்பித்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். நிர்வாகப் பணியிலும், பகுதி நிர்வாகப் பணியிலும் ஈடுபடும் ஆசிரியர் பிரிவினருக்கு பொருந்தாது. (எ.கா. பள்ளித்துணை ஆய்வாளர், முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர், மாவட்ட வளமைய கருத்தாளர், வட்டார வளமைய ஆசிரியர் (BRT) மற்றும் மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட நிர்வாக பணிகள்)

viii. மத்திய அரசால் வழங்கப்படும் தேசிய நல்லாசிரியர் விருது மற்றும் தமிழக அரசால் வழங்கப்படும் டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருது பெற்ற ஆசிரியர்களை பரிசீலனையில் எடுத்துக் கொள்ளக்கூடாது.

ix. கனவு ஆசிரியர் விருதிற்கு ஆசிரியர்களை தெரிவு செய்ய மாநில அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலும் கீழ்க்கண்டவாறு தேர்வுக்குழு அமைப்பட வேண்டும்.

**மாநிலத் தேர்வுக்குழு**

| வ. எண் | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | பள்ளிக்கல்வி இயக்குநர் | தலைவர் |
| 2. | கூடுதல் செயலாளர்/ இணை செயலாளர், பள்ளிக்கல்வித்துறை | உறுப்பினர் |
| 3. | தொடக்கக் கல்வி இயக்குநர் | உறுப்பினர் |
| 4. | இயக்குநர், அரசுத் தேர்வுகள் துறை | உறுப்பினர் |
| 5. | இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | உறுப்பினர் |
| 6. | திட்ட இயக்குநர், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டம். | உறுப்பினர் |
| 7. | பள்ளிகல்வி இணை இயக்குநர், (மேல்நிலைக் கல்வி) | உறுப்பினர்–செயலர் |

**மாவட்டத் தேர்வுக்குழு**

| வ. எண் | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | முதன்மைக் கல்வி அலுவலர் | தலைவர் |
| 2. | முதல்வர், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம். | உறுப்பினர் |
| 3. | மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் | உறுப்பினர் |
| 4. | மாவட்டக் கல்வி அலுவலர்கள் | உறுப்பினர் |
| 5. | மூத்த உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் | உறுப்பினர் |
| 6. | தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற மூத்த தலைமையாசிரியர் | உறுப்பினர் |
| 7. | கூடுதல் மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித்திட்டம் | உறுப்பினர் |

x. மாவட்டத் தேர்வுக் குழுவினர் துணைக்குழுவினை அமைத்து மாவட்ட அளவில் இனம் கண்டு, நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து மேற்குறிப்பிட்ட வழிகாட்டி நெறிமுறைகளைக் கருத்தில் கொண்டு, ஒரு மாவட்டத்திற்கு கணினி மற்றும் அறிவியில்

தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் சிறந்த ஆசிரியர்களிலிருந்து 4 ஆசிரியர்கள் வீதம், கல்வி இணைச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களிலிருந்து 4 ஆசிரியர்கள் வீதம் மற்றும் மாணவர்கள் சேர்க்கை மற்றும் பள்ளி மேலாண்மையில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களிலிருந்து 4 ஆசிரியர்கள் வீதம் மாநிலத் தேர்வுக் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட வேண்டும்.

xi. மாநிலத் தேர்வுக் குழுவினர் மாவட்டத் தேர்வுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட ஆசிரியர்களை பரிசீலனை செய்து இறுதியாக ஒரு மாவட்டத்திற்கு 6 ஆசிரியர்கள் வீதம் கனவு ஆசிரியர் விருதிற்கு தேர்வு செய்யப்பட வேண்டும்.

4. மேற்காணும் பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று, “கனவு ஆசிரியர் விருது” வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஒப்புதல் அளித்தும், கனவு ஆசிரியர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்படும் 192 ஆசிரியர்களும் மாவட்டத்திற்கு ஆறு ஆசிரியர்கள் என்ற ஒரே மாதிரியான எண்ணிக்கையில் தெரிவு செய்யாமல் அந்தந்த மாவட்டங்களைச் சார்ந்த ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கு தகுந்தவாறு ஆசிரியர் தெரிவு இருக்க வேண்டும் என்ற கூடுதல் நெறிமுறைகளோடு, கனவு ஆசிரியர் விருதுக்கான பாராட்டுச் சான்றிதழுடன் ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம்) வீதம் ரொக்கப் பரிசுத் தொகை ரூ.19,20,000/– (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

2202 பொதுக்கல்வி – 02 இடைநிலைக் கல்வி – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் – AA பள்ளிக் கல்வி இயக்ககம்– 59 பரிசுகளும் வெகுமதிகளும். (ததொகு.2202 02 001 AA 5905)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு “புதுப்பணி” (NEW SERVICE) குறித்த செலவினமாகும். இதற்கு சட்ட மன்ற பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு செலவு பொது 1) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்ட மன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வகையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963–ல் உள்ள அட்டவணை– A படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி (வரவு செலவு பொது –1) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2017–18 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (வசெபொ1/கல்வி–II) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் அதன் அ.சா.எண். 65218/17, நாள்.26.12.2017–ன்படி வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேட்டு எண்.2347 (இரண்டாயிரத்து முன்னூற்று நாற்பத்து ஏழு)

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை – 6
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், (தெற்கு) சென்னை–35.
<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை –9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர், சென்னை –9.
பள்ளிக் கல்வி(வ.செ.)த் துறை, சென்னை – 9.
நிதி (கல்வி– II/ வ.செ.பொது– I& II)த்துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/12/17
பிரிவு அலுவலர்.